# பண்டைய காம்போடியாவில் கார்த்திகேயர்

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில் : மஹேஷ் குமார் ஷரண்
( Studies in Sanskrit Inscriptions of Ancient Cambodia )

தமிழ் மொழி பெயர்ப்பு : சாந்திப்பிரியா ( nrj_1945@yahoo.com )

## கம்போடியாவின் சமஸ்கிருதத்தில் உள்ள கல்வெட்டுக்களில் ஆராய்ச்சி

### அத்தியாயம்-2 : பிற மத வழிபாடு, ஆண் மற்றும் பெண் கடவுள்கள்

பிராமணீயம். சைவ வழி, மற்றும் வைஷ்ணவ வழி போன்ற மதப் பிரிவினரைத் தவிற கம்போடியாவில் மற்றும் பல சிறிய மத பிரிவுகளில் நம்பிக்கை உள்ளவர்களும் உள்ளனர். சாதாரணமாக சைவ மற்றும் வைஷ்ணவத் தலங்களில் மட்டுமே கடவுள் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ள நிலையில் சில தனியார் வசங்களில் உள்ள இடங்களிலும் (ஆலயங்கள்) அவைகள் காணப்படுகின்றன. கல்வெட்டுக்களில் கீழ்கண்ட தெய்வங்களின் குறிப்புக்களும் உள்ளன.

1) ஆதித்யா- ஆதித்யஸ்வாமி
2) பிரும்மா
3) கணேஷா
4) சாலிக்கிராஸ்வாமி
5) யமன்
6) ஒன்பது கிரகங்கள்
7) ஸ்வயம்பூவா
8) ஸ்கந்த கார்த்திகேயா *
9) இந்திரன்

*ஏழாம் நூற்றாண்டிலேயே ஸ்கந்த கார்த்திகேயா காம்போடியாவில் அறியப்பட்டு இருந்தார். அங்கோரியர்களின் ஆட்சி காலத்துக்கு முட்பட்ட, மயில் மீது அமர்ந்துள்ள ஸ்கந்த கார்த்திகேயா- சிலைகள் கிடைத்துள்ளன.*



ஏழாம் நூற்றாண்டின் மயில் மீது அமர்ந்த உள்ள கெமிர் (Khmer). ஸ்கந்தா சிலை

கெடி அங்க் ஆலயம், கோம்போன் டிரபிக் மாவட்டம், கம்பரசியா,சாண்ட் ஸ்டோன், மியூசி,நேஷனல் டெஸ் ஆர்ட்ஸ் ஏஷியாடிக்க்குவெஸ்-குய்மெட், பாரீஸ்

( Kdei Ang Temple, Kompon Trabek District, P Veng Province, Kampuchea. Sandstone. Mus national des Arts asiatiques-Guimet, Paris.)